ஆட்சிக்கு முன் – ஆட்சிக்குப் பின் என இரட்டை வேடம் போடுவது போல

# மீனவர் பிரச்சினையிலும் Sofa Model அரசு ஏமாற்று வேலையில் ஈடுபடுவதா?

## இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக மீட்க உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, ஆக.17 -

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

ராமேஸ்வரம் மீனவர்கள் 9 பேரை இலங்கை ராணுவம் கைது செய்து சிறையில் அடைத்துள்ளது கண்டிக்கத்தக்கது.

இந்த பிரச்சினை தொடர்பாக ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு இந்த அரசு சார்பில் கடிதம் எழுதப்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வருகின்றன.



மீனவர் பிரச்சினையில், 'மானே தேனே பொன்மானே என்று கடிதம் எழுதினால் மட்டும் போதுமா உணர்வுப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டாமா?' என்று ஆட்சிக்கு வருவதற்கு முன்பு நம்மை பார்த்து சொன்னவர்கள், இப்போது கடமைக்கு கடிதம் மட்டும் எழுதுவது ஏன்?

ஆட்சிக்கு முன் ஆட்சிக்குப் பின் என ஒவ்வொரு விஷயத்தி லும் இரட்டை வேடம் போடுவது போல, மீனவர் பிரச்சினையிலும் இந்த Sofa Model அரசு ஏமாற்று வேலைகளில் ஈடுபடக்கூடாது.

இவர்கள் சொன்ன அந்த உணர்வுப்பூர்வமான நடவடிக்கையை உடனடியாக மேற்கொண்டு, இலங்கை சிறையில் வாடும் தமிழ்நாட்டு மீனவர் களை மீட்க வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

கோவையில் சக மாணவர்களால் கொலை செய்யப்பட்ட

# அமுதனின் பெற்றோருக்கு ஆறுதல்!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்!

சென்னை, ஆக.15

கோவையில் சக மாணவர்களால் கொலை செய்யப்பட்ட கல்லூரி மாணவர் அமுதனின் பெற்றோரைத் தொடர்புகொண்டு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று ஆறுதல் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே சட்டசபையில் அமுதன் கொலை குறித்து கவன ஈர்ப்பு தீர்மானத்தை எதிர்க்கட்சித் தலைவர் கொண்டு வந்தபோது, திங்கள் அன்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதாக சபாநாயகர் தெரிவித்திருந்தார். "உதயநிதி சார்தான் நீதி பெற்று தர வேண்டும்" என்று அமுதனின் தாயாரும் உருக்கமாகத் தெரிவித்திருந்தார்.

இன்று அமுதனின் பெற்றோரைத் தொடர்புகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அமுதனின் மரணத்துக்குத் தன் ஆழ்ந்த இரங்கல்களையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொண்டார்.

மேலும் திங்கள் அன்று சட்டசபையில் இந்த சம்பவம் குறித்து விரிவாகப் பேசுவதாகவும் அமுதனின் மரணத்துக்கு நீதி கிடைக்கும்வரை, அமுதனின் பெற்றோருக்கு உறுதுணையாக இருந்து போராடுவதாகவும் உறுதிபட தெரிவித்தார்.

---

திருவண்ணாமலை நகருக்கு

# ரயில் சேவைகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

## மக்களவையில் – சி.என்.அண்ணாதுரை கேள்வி!


புதுடெல்லி, ஆக.17 -

திருவண்ணாமலை நகருக்கு ரயில் சேவைகளை அதிகரிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் திருவண்ணாமலை தொகுதிக் கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:-

15 ஆண்டுகளுக்கும் மேலாகியும், இந்தியாவின் முக்கியமான புனிதத் தலமாகவும் ஆன்மிகத் தலமாகவும், தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய மாவட்டமாகவும் விளங்கும் திருவண்ணாமலைக்கு, சென்னை, கோயம்புத்தூர், பெங்களூரு மற்றும் புதுச்சேரி ஆகிய நகரங்களிலிருந்து அத்தியாவசியமான தினசரி ரயில் சேவைகள் இல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? அவ்வாறு இருப்பின், அதன் விவரங்கள் என்ன?

(b) சென்னை-திருவண்ணாமலை ரயில் சேவையை தாம்பரம், திண்டிவனம் மற்றும் விழுப்புரம் வழியாக மீண்டும் தொடங்குவதற்காக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன? இச்சேவை இப்பகுதி மக்களுக்கும் திருவண்ணாமலைக்கு வருகை தரும் பக்தர்களுக்கும் மிகவும் அவசியமானதாகும்.



(c) தற்போது இயங்கி வரும் 66064 புதுச்சேரி- விழுப்புரம் MEMU ரயிலை திருவண்ணாமலை வரை நீட்டிக்கவும், மேலும் திருவண்ணாமலையிலிருந்து பெங்களூருவுக்கு புதிய வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலை இயக்கவும் அரசு முன்மொழிகிறதா? இதன் மூலம் இந்நகரங்களுடன் அத்தியாவசியமான தினசரி ரயில் இணைப்பு முதன் முறையாக ஏற்படுத்தப்படுமா?

(d) அவ்வாறு இருப்பின், மேற்கண்ட முன்மொழிவுகளின் தற்போதைய நிலை உள்ளிட்ட முழுமையான விவரங்கள் என்ன?

(e) நீண்டகாலமாக நிலுவையில் உள்ள இந்த ரயில் இணைப்பு குறைபாடுகளைச் சரிசெய்வதற்கான எதிர்பார்க்கப்படும் காலக்கெடு என்ன?

இவ்வாறு சி.என். அண்ணாதுரை கேள்விகள் கேட்டிருந்தார்.

---

திராவிட மாடல் ஆட்சியில் முடிக்கப்பட்ட திட்டங்கள் தான்

# த.வெ.க. ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களாகப் போடப்பட்டுள்ளன!

## முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா விளக்கம்!

**சென்னை, ஆக.17 -**

**கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் பேச்சு வார்த்தைகள் நடத்தி முடிக்கப்பட்ட திட்டங்களுக்குத்தான், தவெக ஆட்சியில் நேற்று முன்தினம் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன என்று முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் விரிவாக குறிப்பிட்டுள்ளார்.**

தவெக அரசு நடத்திய முதலீட்டாளர்கள் கூட்டம் தொடர்பாக திமுக முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்கள் வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

75% MoU கள் திமுக ஆட்சியில் தயார் செய்தவை

இந்த 100 நாட்கள்ல பெரிய புதிய திட்டங்கள் ஏன் வரவில்லை?

வளர்ச்சிக்கு முக்கியமான பரந்தூர், ஒசூர் விமான நிலையங்கள் அமைப்பதில் இந்த அரசின் முடிவு என்ன.?

**நம்பர் 1 :**

இந்த Conclave விற்கு ஊடகங்களை ஏன் அனுமதிக்கவில்லை.? ஏன் இவ்வளவு Secrecy? ஏன், இதுல வர திட்டங்கள் எல்லாமே சென்ற திராவிட மாடல் ஆட்சில நாங்க ரெடி பண்ணினது தான் என்பது ஊடகங்களுக்கு தெரிஞ்சிடும் என்ற எண்ணமா.? எது



வாக இருந்தாலும் முதலீடுகளை ஈர்க்கவும் அதை Promotion செய்யவும் Press மிக முக்கியமான ஒன்று.

**நம்பர் 2 :**

இதுல வந்த MOU-ஸ்களில் கிட்டத்தட்ட ஒரு 75% திராவிட மாடல் ஆட்சில ரெடி பண்ணி வச்சிருந்த அந்த திட்டங்கள்தான் அப்படின்னு எல்லாருக்கும் தெரியுது. அது உங்களுக்கும் தெரியும்னு நினைக்கிறேன்.

**நம்பர் 3:**

நம்ம "Bullish on TN" லோகோவே மாத்திருக்கீங்கன்னு சொல்றாங்க. எல்லாத்துலயும் ஸ்டிக்கர் ஒட்ட தேவையில்ல. இதெல்லாம் வந்து நாங்க மார்க்கெட் பண்ணி, இவ்ளோ தூரம் Project செய்து, Publicity கொண்டு வந்து வச்சிருக்கோம் . அத நம்ம அப்படியே தொடர்ச்சியா நம்ம தமிழ்நாட்டுக்கு யூஸ் பண்றதுல என்ன தவறுன்னு எனக்கு தெரியல.

அதுல ஒன்னும் தி.மு.க. பிராண்டிங்எல்லாம் ஒன்றும் நாங்க ஒட்டல. அது தமிழ்நாட்டுக்கான பிராண்டிங். அந்த தமிழ்நாட்டோட பிராண்டிங்க திருப்பி ரீபிராண்ட் (Re-brand) பண்ணி, திருப்பி ரீ-ஸ்டார்ட் (Re-start) பண்ண வைக்காதீங்க. இத்தனை நாள் செய்திருக்கும் அந்த பணிய யூட்டிலைஸ் (Utilize) பண்ணிக்கோங்க. அது அடுத்த கட்டத்துக்கு தமிழ்நாட்ட உயர்த்துறதுக்கு உதவியா இருக்கும்.

**நம்பர் 4:**

ஆந்திர பிரதேஷ் CM சந்திரபாபு நாயுடு அவர்கள் கடந்த சில நாட்களுக்கு முன்பு State Investment Promotion Bureau மீட்டிங்க அவரே நடத்தினார். அதுல ரெண்டு லட்சம் கோடி ரூபாய்க்கான திட்டங்களை கிளியர் பண்றாரு.

ஆனா இங்க இன்னும் சென்ற திமுக ஆட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் பேச்சுவார்த்தைகள் எல்லாம் நடத்தப்பட்டு முடிக்கப்பட்ட அந்த திட்டங்களோட MOU-ஸ் மட்டும்தான் இன்னைக்கு நீங்க சைன் பண்றீங்க. அதுதான் Predominantly சைன் பண்றீங்க அப்படின்னு சொல்றாங்க. கிட்டத்தட்ட 75% of those MOUs signed today are from... or an outcome of the DMK regime's good work அப்படின்னு சொல்றாங்களே...

அப்போ புதிய திட்டங்கள் ஏன் வரல? இந்த 100 நாட்கள்ல ஏன் பெரிய புதிய திட்டங்கள் இன்னும் வரல?

**நம்பர் 5:**

ரொம்ப முக்கியமான ஒன்று Infrastructure. இவ்வளோ திட்டங்களும் இங்க வரணும், இன்னும் பெரிய திட்டங்கள்லாம் இங்க வரணும்னா, இன்வெஸ்ட்மென்ட் ரேஸ்ல நமக்கு இன்ஃப்ராஸ்ட்ரக்சர் ரொம்ப ரொம்ப முக்கியம். ஒசூர் அண்ட் பரந்தூர் ஏர்போர்ட்ஸ் very very critical for Tamil Nadu's industrial growth. இதுல இன்றைய ஆட்சியாளருக்கு என்ன ஸ்டாண்ட் (Stand)ன்றது கிளாரிட்டி இன்னும் வரல.

எனவே, திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சி காலத்துல தமிழ்நாடு பெற்றிருந்த அந்த வளர்ச்சி தொடர வேண்டுமென்றால், Investment promotion நாம இன்னும் கவனம் செலுத்தணும். நிச்சயமாக மிகப்பெரிய அளவுல புதிய நிறுவனங்கள், புதிய வெளிநாட்டு முதலீடுகள் நம்ம தமிழ்நாட்டுக்கு புதிய இடங்களில் வருவதை நாம் உறுதி செய்வது மிக மிக அவசியம். தற்போதைய முதலமைச்சர் இதுல நிச்சயமாக கவனம் செலுத்தணும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

மாற்றுத் திறனாளிகளை

# 'ஊனமுற்றோர்' எனக் கூறிய அமைச்சர் அருண்ராஜ்!

## மாற்றுத் திறனாளிகள் அணி மாநிலச் செயலாளர் தீபக்நாதன் கண்டனம்!

சென்னை, ஆக. 17-

மாற்றுத்திறனாளிகளை உடல் ஊனமுற்றோர் எனக் கூறிய அமைச்சர் அருண் ராஜுக்கு,தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணி மாநிலச் செயலாளர் தீபக் நாதன் கண்டனம் தெரிவித் துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்,



தந்தை பெரியாரைக் கொள்கை தலைவராக வைத்திருக்கிறோம் என்று பெருமை பீற்றிக் கொள்ளும் த வெ.க அரசின் அமைச்சர் அருண்ராஜ் பகுத்தறிவுக்கு சற்றும் ஏற்பில்லாத வார்த்தையான உடல் ஊனமுற்றோர் என்ற வார்த்தையை மாற்றுத் திறனாளிகளை குறிப்பதற்காக பயன்படுத்தி உள்ளதற்கு கண்டனம் தெரி வித்துள்ளார்.

வார்த்தைகளால் கூட காயப்படுத்தி விடக் கூடாது என்று ஊனம் உற்றவர்கள் என்ற வார்த்தையை மாற்றி மாற்றுத்திறனாளிகள் என்கின்ற வார்த்தையை அழகு தமிழில் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் என அவர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

திமுகவின் மீது கடும் ஒவ்வாமையில் உள்ள த.வெ.க. அரசு, எல்லா திட்டங்களுக்கும் பெயர் மாற்றுவதைப் போல், பொது புத்தியில்" அழுக்கேறிய சிந்தனையில் கூறப்படுகின்ற வார்த்தை யான ஊனமுற்றோர் என்ற வார்த்தையை அமைச்சர் பயன்படுத்தியிருப்பது ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது என கண்டனம் தெரிவித்துள்ளார்.

மாற்றுத்திறனாளிகளை உடல் ஊனமுற்றோர் என குறிப்பிட்ட அமைச்சர் அருண் ராஜ் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என தி.மு.க. மாற்றுத்திறனாளிகள் அணி மாநிலச் செயலாளர் தீபக் நாதன் வலியுறுத்தி உள்ளார்.

---

தமிழகத்தில் பாலியல் குற்றங்கள் அதிகரிப்பு!

# த.வெ.க. ஆட்சியில் பெண்கள் வெளியே செல்வதற்கே அச்சம்!

## முன்னாள் அமைச்சர் இரா.இராஜேந்திரன் குற்றச்சாட்டு!

சேலம். ஆக. 17 -

தமிழகத்தில் பாலியல் குற்றங்கள் அதிகமாக நடைபெற்று பெண்கள் வெளியே செல்வதற்கு அச்சம் ஏற்படும் நிலை உள்ளதாக முன்னாள் அமைச்சர் ராஜேந்திரன் குற்றச்சாட்டினால் சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட தெற்கு சட்டமன்ற தொகுதியில் பகுதி வாரியாக திமுக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகளை நேரில் சந்தித்து வரும் மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ராஜேந்திரன் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி வருகிறார்.

அதன்படி குகை பகுதியில் உள்ள தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகளை சந்தித்த முன்னால் அமைச்சர் ராஜேந்திரன் அவர்களிடம் கலந்துரையாடி தொடர்ந்து மக்கள் பிரச்சினைக்காக குரல் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மேலும் அவர் பேசுகையில் தமிழகத்தில் நாள்தோறும் கொலை கொள்ளை மற்றும் பாலியல் குற்றங் கள் நடைபெறாத நாளே இல்லை என்ற வகையில் குற்ற சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும்,

அதிலும் பாலியல் குற்றங்கள் என்பது பெண்கள்





வெளியே வருவதற்கு அச்சப்படும் வகையில் நிகழ்ந்து வருவதாகவும் இதற்கு பெரும்பான்மை யான குற்றவாளிகள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர் என்றும் ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் இதுகுறித்து எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் தொடர்ந்து மௌனம் காத்து வருவது ஆபத்தானது என்றும் இவை அனைத்தையும் மக்கள் பார்த்துக்கொண்டு தான் உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்..

கூட்டத்தில் மாவட்ட, செயற்குழு உறுப்பினர் சி ராஜேந்திரன், மாநகரச் செயலாளர் ரகுபதி, துணை செயலாளர் கணேஷன்,MM ஷெரீப்,SR அன்வர், பொதுக்குழு உறுப்பினர் லோகநாதன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

---

ஆவின் பாலைத் தொடர்ந்து

# ஆவின் நெய் மற்றும் வெண்ணெய்க்கும் தட்டுப்பாடு!

சென்னை, ஆக.17 -

ஆவின் பாலைத்தொடர்ந்து ஆவின் நெய் மற்றும் வெண்ணெய்க்கும் தமிழ்நாட்டில் கட்டுப்பாடு நிலவுகிறது. ஆவின் பாலகங்களுக்கு ஒரு நாளைக்கு 20 முதல் 30 லிட்டர் நெய் மட்டுமே விநியோகம் செய்யப்படுவதால் பொதுமக்கள் சிரமம் அடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் சென்னை உட்பட பல்வேறு மாவட்டங்களில் ஆவின் பால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் தனியார் நிறுவன பால் பாக்கெட்டுகளை அதிக விலை கொடுத்து வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில், பாலைத் தொடர்ந்து ஆவின் நெய் மற்றும் வெண்ணெய்க்கும் தமிழ்நாட்டில் கட்டுப்பாடு நிலவுகிறது.


5 லிட்டர் ஆவின் நெய் டப்பா கடந்த 7 மாதங்களுக்கு முன்பே நிறுத்தப்பட்டுள்ளது. தற்போது, ஒரு லிட்டர் நெய் டப்பாவுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதேபோன்று, ஒரு லிட்டர் நெய் பாக்கெட்டும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். பாலின் அளவு குறைந்தாலே பால் சம்பந்தப்பட்ட பொருட்களின் உற்பத்தி தானாக குறைந்துவிடும். இதன் காரணமாகதான், ஆவின் நெய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## தம்பி ஏ. தேவேந்திரன்

**ஆகஸ்ட் 17 (1995)**



**திராவிட இயக்க கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு தி.மு.கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகப் பணியாற்றியவர். தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், தொடர்ந்து 38 ஆண்டுகளாக நகர்மன்ற உறுப்பினராகவும், மயிலாடுதுறை நகர்மன்றத் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**கல்லக்குடி, கருப்புக் கொடி, விலைவாசிய உயர்வு எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று 17 முறை சிறை சென்றவர்.**

**"மதுரைக்கு முத்து, மாயூரத்திற்கு தம்பி தேவேந்திரன்" என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**